கவனிக்க.-19.01.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (II அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2056 - 2018 ජනවාරි මස 26 වැනි සිකුරාදා - 2018.01.26

*2056 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர் திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 16 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 18 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால்மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்**

*19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்பு ஒன்றினை இரத்து செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்*

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர், பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19 (4) இன் கீழ் அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களால், 1982.02.10 ஆந் திகதி அளிக்கப்பட்ட இலக்கம் அனு/பி. செ./482 இன் சொந்தக்காரரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 12 இல் வசிக்கும் ஹெட்டியாராச்சிகே எமானிஸ் அப்புஹாமி என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 483 ஆம் இலக்கத்தின் கீழ் 1982.06.02 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்டரீதியான பின்னுரித்தாளராக ஒருவரை நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவன் / அவள் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வு கூறல் இருப்பின் அதுபற்றி 2018.02.19 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.*

**அட்டவணை**

*வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம்பலாத மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கோரளே, இல. 5ஏ ராஜாங்கன கெலனி கிராம சேவை அலுவலக பிரிவில் உள்ள ராஜாங்கனை வட்டார இல. 12 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள இ. கொ. வ. 14 ஆம் இலக்க களத்தாளின் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 211 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதுமான 02 ஏக்கர் (இரண்டு) 01 றூட் (ஒன்று) 35 பேர்ச்சஸ் (முப்பத்தைந்து) பரப்பளவுள்ளதும் விஜயப்புர வயல் என அழைக்கப்படும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு: வடக்கில் : காணித்துண்டு இலக்கம் 220 ; கிழக்கில்: காணித்துண்டு இலக்கம் 212 ; தெற்கில் : காணித்துண்டு இலக்கம் 215, கலாஓய ஒதுக்கம் ; மேற்கில் : காணித்துண்டு இலக்கம் 210.*

*பீ. ஜீ. சுனில் அபேகோன்*
*பிரதேச செயலாளர்,*
*ராஜாங்கனை.*

*2017, ஒற்றோபர் 24.*

*1-657*

---

*இணைப்பு 9*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்**

*19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்*

*மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர், புத்திகா ருவனி சமரதுங்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களால், 1995.08.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள களு/ ப்ர/ களு/ 896 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான கோபிவாவத்த, தெல்துவ எனும் முகவரியில் வசிக்கும் கனத்த கமகே டொன வீரரதன் என்பவருக்கு கையளிக்கப்பட்டு களுத்துறை/பாணந்துறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டி.ஓ 24/208 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.11.13 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையாளர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.02.09 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

களுத்துறை நிருவாக மாவட்டத்தின், களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 709டி அரியகமை பற்றில் கோரளையில் உள்ள இலக்கம் 709 டி அரியகமை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தெல்துவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், களுத்துறை நில அளவை அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு மு. பி. க. 2843 ஆம் இலக்கத் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 53 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0383 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான தல்லஸ் கெலே அரச காணித்துண்டு : வடக்கில்: மு. பி. க. 2843 இல் லொட் இல. 52, 41, 40, 59 ; கிழக்கில்: மு. பி. க. 2843 இல் லொட் இல. 59, 54 ; தெற்கில் : மு. பி. க. 2843 இல் லொட் இல. 54, 58 ; மேற்கில் : மு. பி. க. 2843 இல் லொட் இல. 52, 42.

புத்திகா ருவனி சமரதுங்க,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

2017, நவெம்பர் 15.

1-695

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம்**

19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையின் மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள அக்குறஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஆகிய ஒ. வி. சந்தன திலகரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களால், 1944.11.07 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள MR/793 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான குருல்லமுள்ளஹேன, பரகஹவத்த எனும் முகவரியில் வசிக்கும் தெல்லபுரகெ லொகுஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டி.ஓ 86 ஆம் இலக்கத்தின் கீழ் 1945.06.19 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.02.09 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

மாத்தறை நிருவாக மாவட்டத்தின், அக்குறஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் வெலிகம் கோரளையிலுள்ள பரகஹவத்த கிராம அலுவலர் பிரிவைச் சேரந்த பரகஹவத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவை மா அதிபர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு .............. ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/................ என்பவரால் தயாரிக்கப்பட்ட அ. க. பி. 557 இரேகை வரைதலில் மார்/ பி/ 89/ 112 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 294 BW 00ஏக்கர் 03 றூட் 33 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு. அரச காணியின் பெயர் : குருல்லமுள்ளஹேன.

ஒ. வி. சந்தன திலகரத்ன,
பிரதேச செயலாளர்,
அக்குறஸ்ஸ.

2017, ஒற்றோபர் 24.

1-696

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. :4/10/25119
பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : ஈபீ/28/லெஸ்/பீஏரி/எம்பி/270

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 157ஏ, செல்வாநகர் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த செல்வாநகர் எனும்கிராமத்தில் அமைந்துள்ளதும் பீபீமட 2388 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.6052 ஹெக்டயார் விஸ்தீரண முள்ளதுமான அரச காணியை குத்தகைக்கு தருமாறு கேட்டு உயர் தொழில்நுட்ப கல்லூ ரி கல்வி நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : ஆர். டீ. ஏ. வீதி மற்றும் வெம்புபூமி ;
கிழக்கு : ஆர். டீ. ஏ. வீதி மற்றும் வெம்புபூமி ;
தெற்கு : வெம்புபூமி ;
மேற்கு : வெம்புபூமி மற்றும் மட்டக்களப்பு - கல்முனை பாதை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2017.05.02 தொடக்கம் 2047.05.01 வரை)

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2017 ஆம் வருடத்திற்கான காணியின் வர்த்தக பெறுமதியின் 1/2 □ வருடாந்தக் குத்தகையாகக் கொடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி கல்வி நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது.

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்.

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) 2017.05.02 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க்குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய் வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஜி. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, சனவரி 26.

01-658